# December 21, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மூன்று முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் சுவிட்சர்லாந்தின் ஸ்டேன் வாவ்ரிங்கா 2026 ஆண்டு சீசனுடன் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

    i. 41 வயதான வாவ்ரிங்கா, 2014 ஆஸி. ஓபனில் ரபேல் நடாலையும், 2015 பிரெஞ்சு ஓபனில் ஜோகோவிச்சையும், 2016 யுஎஸ் ஓபனில் ஜோகோ விச்சையும் வீழ்த்தி மூன்று முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

2. துபையில் நடைபெற்ற ரோல்பால் உலகக்கோப்பை போட்டியில் இந்திய அணி தங்கம் வென்றது.
ஐக்கிய அரபு அமீரகத்தில் 7-ஆவது, ரோல்பால் உலகக் கோப்பைபோட்டி கடந்த 14 முதல் 18 வரை துபையில் நடைபெற்றது.

    i. இந்திய அணி வீரர்கள், வீராங்கனைகள் 12 பேரும் பங்கேற்று சிறப்பாக விளையாடி தங்கம் வென்றனர். இதில் தமிழகத்தை சார்ந்த வீராங்கனை மதுநிதா, வீரர் தீபக் ராஜா திண்டுக்கல் மற்றும் மகதி கோவை ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

3. மலையாள திரையுலகின் மூத்த நடிகர், புகழ்பெற்ற திரைக்கதை எழுத்தாளர் மற்றும் இயக்குநர் ஸ்ரீநிவாசன் (69) உடல்நலக் குறைவால் கொச்சியில் காலமானார்.

4. இந்தியாவில் விற்கப்படும் முட்டைகள், மக்கள் சாப்பிட முற்றிலும் உகந்தவை; அவற்றில் புற்றுநோயை உருவாக்கும் ஆன்ட்டிபயாடிக் மருந்துகளின் கூறுகள் இருப்பதாக பரவும் தகவல் அறிவியல்பூர்வ ஆதாரமற்றது; மக்களைத் தவறாக வழிநடத்தக் கூடியது என்று இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆணையம் (எஃப்எஸ்எஸ்ஏஐ) விளக்கமளித்துள்ளது.

    i. கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த நைட்ரோஃப்யூரான் எனப்படும் ஆன்ட்டிபயாடிக் மருந்தில் புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டதால் அதற்கு உலகளாவிய தடை விதிக்கப்பட்டது.

    ii. இந்த நிலையில், கர்நாடகத்தில் முன்னணி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளில் நைட்ரோஃப்யூரான் மருந்துகளுக்கான கூறுகள் இருப்பதாக சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களில் தகவல்கள் பரவி, மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது.

    iii. ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் கால்நடைகள் மீது நைட்ரோஃபியூரான் பயன்பாட்டுக்கு தடை விதித்துள்ளன. இந்தியாவிலும் கடந்த 2011- ஆம் ஆண்டின் உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளின்படி கோழிப் பண்ணைகளின் அனைத்து நிலைகளிலும் நைட்ரோஃபியூரான் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது.

    iv. நைட்ரோஃபியூரான் தடயங்களின் பரிந்துரைக்கப்பட்ட வரம்பு ஒரு கிலோவுக்கு ஒரு கிராம் என்பதாகும். இந்த வரம்பு, ஒழுங்காற்றுதல் அமலாக்க காரணங்களுக்கானது மட்டுமே; மாறாக, நைட்ரோஃபியூரான் பயன்பாட்டை

அனுமதிப்பதை குறிக்காது. இந்த வரம்புக்கு குறைவாக கண்டறியப்படும் தடயங்கள், உணவு பாதுகாப்பு விதிமுறை மீறலையோ, உடல் நலனுக்கு தீங்கு விளைவிப்பதையோ குறிப்பதில்லை.

5. நாகை டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில், இசை முரசு நாகூர் இ.எம். ஹனீபா நூற்றாண்டு விழா நடைபெற்றது.

6. விழுப்புரம் மாவட்டம், உள்ள வானூர் வட்டத்தில் ஆரோவில் சர்வதேச நகரில் இரண்டாவது ஆண்டு இலக்கியத் திருவிழா 2025 கடந்த 15-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

7. இஸ்லாமிய தேச (ஐஎஸ்) பயங்கரவாதிகளுக்கு எதிராக சிரியாவில் அமெரிக்கா தீவிர குண்டுவீச்சு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. இது குறித்து அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளையகம் (சென்ட்காம்) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

   i. சிரியாவின் மத்திய பகுதியில் ஐஎஸ் பயங்கரவாதிகளின் பயிற்சி முகாம்கள் மற்றும் தலைமை இடங்களை இலக்காகக்கொண்டு 'ஆபரேஷன் ஹாக்ஐ ஸ்ட்ரைக் என்ற பெயரில் தீவிர தாக்குதல் நடத்தப்பட்டது.

   ii. சிரியாவின் புதிய தற்காலிக அரசு, அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஐஎஸ் பயங்கரவாதத்தை ஒழிக்க ஒத்துழைப்பு அளிக்கத் தயார் என்று கூறியுள்ளது.

   iii. இந்தத் தாக்குதல், சிரியாவில் அஸாத் ஆட்சி வீழ்ந்த பிறகு அமெரிக்கா நடத்திய மிகப்பெரிய ராணுவ நடவடிக்கையாகும்.

8. சர்வதேச ஜவுளி, ஆடை ஏற்றுமதி சந்தையில் வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளுடன் நிலவும் போட்டியைச் சமாளிக்க, இந்தியா அதிக எண்ணிக்கையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம்' என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

   i. தில்லியில் நடைபெற்ற ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சில் (ஏஇபிசி) விருது வழங்கும் விழாவில் அவர் ஆற்றிய உரை: கடந்த காலங்களில் சர்வதேச ஜவுளி ஏற்றுமதிச் சந்தையில் இந்தியாவுக்குப் பெரிய அளவில் போட்டி இல்லை. ஆனால், தற்போது வங்கதேசம், லாவோஸ், கம்போடியா, வியத்நாம் மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் இந்தியாவுக்கு கடும் சவாலாக உருவெடுத்துள்ளன.

   ii. அந்த நாடுகள், மற்ற உலக நாடுகளுடன் கையொப்பமிட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களே அவர்களுக்குப் பெரிய சாதகமாக உள்ளது. எனவே, இந்தியாவும் இத்தகைய ஒப்பந்தங்களை மேற்கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

   iii. இந்தியாவின் ஆடை சந்தையின் மதிப்பை 2030-ஆம் ஆண்டுக்குள் 35,000 கோடி டாலராகவும், ஏற்றுமதியை 10,000 கோடி டாலராகவும் உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

iv. புவிசார் அரசியல் சூழல்கள் ஜவுளி துறைக்குச் சவால்களை ஏற்படுத்தினாலும், சர்வதேச அளவில் இந்தியா 6- ஆவது பெரிய ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது. ஜவுளித் துறையினர் புதிய சந்தைகளைக் கண்டறிவதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கழிவு மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

9. வடகிழக்கு இந்தியாவின் விமானப் போக்குவரத்து மையமாகவும், தென்கிழக்கு ஆசியாவின் வாயிலாகவும் விளங்கும் குவாஹாட்டி சர்வதேச விமான நிலையத்தில் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்ட 2-ஆவது முனையத்தை பிரதமர் மோடி திறந்துவைத்துப் பார்வையிட்டார்.

i. 1.40 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில், அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு பிராந்தியத்தின் பன்முகத்தன்மை மற்றும் கலாசார பாரம்ப ரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள இந்த முனையம், ஆண்டுக்கு 1.3 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்டதாகும். இயற்கை கருப்பொருளில் வடிவமைக்கப்பட்ட நாட்டின் முதல் விமான நிலையம் என்ற சிறப்புக்குரியது. இதன் உள் அலங்கார கட்டமைப்புகளில் 1.42 லட்சம் மெட்ரிக் டன் மூங்கில்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ii. விமான நிலையத்தின் வெளிப்பகுதியில் அஸ்ஸாமின் முதலாவது முதல்வர் கோபிநாத் பர்டோலோயின் 80 அடி உயர சிலையையும் பிரதமர் மோடி திறந்துவைத்தார். இந்தச் சிலை அண்மையில் காலமான புகழ்பெற்ற சிற்பி ராம் சுதாரால் வடிவமைக்கப்பட்டதாகும். விமான நிலைய பராமரிப்புக்கு கூடுதலாக ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

10. தொழில் வழிகாட்டி நிறுவன அறிவிப்பின்படி இந்தியாவின் அறிவுசார் எதிர்காலத்தை வடிவமைக்கும் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார். உள்நாட்டு உற்பத்திகளில் (ஜிஎஸ்டிபி) தமிழ்நாடு 16 சதவீத வளர்ச்சி பெற்றதையும், காப்புரிமை (பேடன்ட்) தாக்கல் செய்வதில் தமிழ்நாடு முதலிடம் பிடித்ததையும் குறிப்பிட்டு முதல்வர் இதைத் தெரிவித்துள்ளார்.

i. இந்திய ரிசர்வ் வங்கி, மாநிலங்களின் வளர்ச்சி நிலைகள் குறித்த புள்ளிவிவரங்களை அண்மையில் வெளியிட்டது. அதில் உள்நாட்டு உற்பத்தியில் (ஜிஎஸ்டிபி) தமிழ்நாடு 16 சதவீதம் வளர்ச்சிபெற்று இந்தியாவில் உச்சம் கண்டு புதிய சாதனையைப் படைத்துள்ளது.

ii. அதைத் தொடர்ந்து, கடந்த டிச. 18-இல் தொழில் வழிகாட்டி நிறுவனம் வெளியிட்டுள்ள இந்திய காப்புரிமைப் பதிவுகளில் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது; மற்ற மாநிலங்களை விட மிகப்பெரிய இடைவெளியடன் 23 சதவிதம் வளர்ச்சி கண்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது என்னும் விவரம் தெரியவத்துள்ளது.

iii. அதாவது, இந்தியாவில் காப்புரிமை (பேடன்ட்) தாக்கல் செய்வதில் தமிழ்நாடு முதலிடம் பிடித்து, நாட்டின் அறிவுசார் தலைநகராக தனது நிலையை மீண்டும்

உறுதிப்படுத்தியுள்ளது. இந்திய அளவில் பதிவுக்காக விண்ணப்பிக்கப்பட்ட மொத்தம் (68201) காப்புரிமைகளில் தமிழ்நாடு மட்டுமே 15,440 காப்புரிமைகளைப் பதிவு செய்துள்ளது. இது நாட்டின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 23 சதவீதம் ஆகும்.

iv. தமிழ்நாட்டின் ஆழமான ஆராய்ச்சித் தளம் வலுவான தொழில்முறை வலிமை, கல்வி நிறுவனங்களுக்கும் - தொழில் துறையினருக்கும் இடையே நிலவும் நெருக்கமான ஒருங்கிணைந்த சூழல் ஆகியவை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைக்கு முக்கியக் காரணங்களாக அமைந்துள்ளன. இந்தத் தொடர் வளர்ச்சியின் மூலம், இந்தியாவின் அறிவுசார் சொத்துரிமை மற்றும் கண்டுபிடிப்புத் துறையில் தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. பொருநை நாகரிகத்துக்கு புகழ்சேர்க்கும் வகையில், ரூ.67.25 கோடியில் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். திருநெல்வேலி, பாளையங்கோட்டையை அடுத்தரெட்டியார்பட்டி மலைப் பகுதியில் 13 ஏக்கர் பரப்பில் 54,296 சதுர அடியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.